பக்கங்கள்: 4

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 தை 2 செவ்வாய்க்கிழமை (16-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 51

## இந்தியாவின் ஆதரவின்றி எந்த ஒரு முயற்சியும் வெற்றி அளிக்க முடியாது

### இலங்கை நெருக்கடி குறித்து கல்கத் கருத்து

கொழும்பு, ஜன. 16

''இலங்கை நெருக்கடிக்கு தீர்வு காண்பதில், இந்தியாவின் ஆதரவின்றி எந்த நாடுமே வெற்றிகண்டு விடமுடியாது''.

இப்படி இந்திய படை அதிகாரி லெப்டினன்ட் கேணல் அமர்த்சிங் கல்கத் கூறி உள்ளார்.

இலங்கை இனநெருக்கடியைப் பொறுத்த வரை, தீர்வுகாண்பதற்கான எந்த ஒரு முயற்சியிலும் ஈடுபடக் கூடிய எந்தவொரு நாடுமே இந்தியாவின் ஆதரவு இல்லாமல் அதில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வங்கக்கடலில் காவியமான கிட்டு நினைவு நாள் இன்று

இந்திய வல்லாதிக்கத்தின் சதியால் வீரச்சாவெய்திய கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் நினைவு தினம் இன்று அனுஷ்டிக்கப் படுகிறது.

இந்த வீரவேங்கைகளின் நினைவாக யாழ். மாவட்டத்தில் பல இடங்களில் தூபிகள், படங்கள் அமைத்துள்ள இடங்களில் இன்று காலை 10 மணியளவில் நினைவு வீரவணக்கங்கள் நடைபெறும்.

இன்று மாலை 5 மணிக்கு திருவில் சதுக்கத்தில் வீரவணக்க நிகழ்வுகள் இடம் பெறும்.

கேணல் கிட்டு நினைவாக நினைவுப் பதாகைகள் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதியில் கட்டப்பட்டுள்ளன.

# மற்றொரு ராணுவ நடவடிக்கைக்கு ஸ்ரீலங்காப் படை தயாராகின்றது!

## பிரிட்டனில் கதிர்காமர் தெரிவிப்பு

லண்டன், ஜனவரி 16

**விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஸ்ரீலங்கா படையினர் இன்னுமொரு இராணுவ நடவடிக்கைக்கு— விடுதலைப் புலிகளிடமிருந்து கிழக்கைக் கைப்பற்ற — தயாராகின்றனர் என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர் பி. பி.ஸி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.**

பிரிட்டனில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் அவர் மேலும் பி. பி. ஸிக்கு தெரிவித்ததாவது:

விடுதலைப் புலிகளிடம் ஆளணி உண்டு; மிகவும் பழமை வாய்ந்த அமைப்பு அது. நல்ல ஆயுதங்களை அவர்கள் பெற்றுள்ளார்கள். அத்தகைய இயக்கத்தை ஒரே இரவில் அழிக்க முடியாது.

இவ்வளவு பலமிருப்பதாகத் தெரிந்தும் மேலும் அவர்கள் மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

சில நிபந்தனைகளின் பேரில் அவர்களுடன் பேச அரசு தயாராகவிருக்கிறது. ஆகக்குறைந்தது அடையாள மாகவேனும் ஆயுதங்களை அவர்கள்கைவிட வேண்டும். வன்முறைகள் நிறுத்தப் பட வேண்டும்.

பேச்சுக்கள் நிச்சயமாக காலவரம்புக்குள் நடத்தப் பட வேண்டும்.

விடுதலைப் புலிகள் கோரும் தனித் தமிழீழ தாயகம் பற்றி எவ்வித பேச்சும் நடக்க முடியாது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## போதிய ஆளணி பலம் படையினரிடம் இல்லை

### ஜோர்ஜ் ஆர்னி கூறுகிறார்

கொழும்பு, ஜன. 16

விடுதலைப் புலிகள் கிழக்கில் காடுகளில் பெருமளவு ஊடுருவித் தம்மைப் பலப்படுத்திக் கொண்டுள்ளனர். அங்கேயே அடுத்தமோதலில்இடம் பெறப் போகிறது. ஆனால் படையினருக்கு ஆளணி பலம் போதாது.

வவுனியாவிலிருந்து கொழும்பு திரும்பிய பி. பி ஸி செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் மூன்றில் ஒரு பகுதியையே படையினர் பிடித்து வைத்துள்ளனர்.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளைக்கைப்பற்ற மேலதிக படையினர் தேவைப்படுவர்.

அகதிகள் விடயத்தில் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் அகதிகளை யார் வைத்திருப்பது என்பதில் இழுபறி இருந்தது. இதில் புலிகளே வெற்றி பெற்றுள்ளனர்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-6)

## நாடாளுமன்ற கட்டடத்துக்கு மேலாக பறந்த சிறிய ரக மர்ம விமானம்

### அரச வட்டாரங்கள் அதிர்ச்சி

சாவகச்சேரி, ஜன. 16

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 4.10 மணியளவில் அவசரகால பிரேரணை மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் —

நாடாளுமன்ற கட்டடத்துக்கு மேலாக இனந்தெரியாத சிறிய ரக விமானம் ஒன்று பறந்து சென்றதாக ஸ்ரீலங்கா அரசின் உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடாளுமன்ற எல்லையில் உள்ள தியவன ஓயா நீர்தேக்கத்தின் மேலாக திடீரென இந்த விமானம் பறந்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்தவேளை— எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை உட்பட பல அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைப் போராளிகள் 72 பேர் கொழும்பிலாம்

கொழும்பு, ஜன. 16

கொழும்பில் பாரிய குண்டு வெடிப்புக்களை நடத்தவும் அரசியல் வாதிகளைக் கொலை செய்யவும் விடுதலைப்புலிகளின் 72 தற்கொலைப் படையினர் கொழும்பு வந்திருப்பதாகவும் —

அவர்களை வழி நடத்த பத்துத் தலைவர்களும் வந்திருப்பதாகவும் — கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி குமாரதுங்க, பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை உட்பட முக்கிய அரசியல் தலைவர்களையும் முப்படை உயர் அதிகாரிகளையும் கொலை செய்வதே இவர்களின் நோக்கம் என்று புலனாய்வு அறிக்கைகள் தெரிவிப்பதாகவும் அவர் செய்தியில் மேலும் கூறப்படுகிறது.

(இ)

## பெரும்பாலான மக்கள் எதிர்பார்ப்பை யுத்தம் மூலமாவது அடைவோம்

### பொங்கல் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி

கொழும்பு, ஜன. 16

பெரும்பாலான மக்கள் எதிர்பார்க்கும் ஆத்மார்த்தமான விமோசனத்தை — சுதந்திரத்தை — சமாதான வழியினாலேனும் சரி. யுத்தத்தின் வாயிலாகவேனும் சரி அடைந்தே தீருவது என தற்போது அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா விடுத்துள்ள பொங்கல் செய்தியில் மேற்கண்டாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய யுத்தம் பெரும்பாலான தமிழ் சகோதரர்களுக்கு எதிரான யுத்தம் அல்ல. இது பெரும்பாலான தமிழ்மக்கள் அன்றாட வாழ்க்கையை சுதந்திரமாக மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும் யுத்தமாகும்.

எல்லா சமூகத்தவர்களும் இந்த அழிவுகரமான யுத்தம் என்று முடியுமோ, என்று அந்த நாளை எதிர்பார்க்கிறார்கள்.

அரசாங்கம் அரசியல் தீர்வு யோசனைகளை முன்வைத்துள்ளது.

இப்படி ஜனாதிபதி மேலும் தமது பொங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார். (இ)

## இடம்பெயர்ந்தோருக்கு வன்னிப் பகுதியில் வீடு

### நேற்று கையளிப்பு வைபவம்

சாவகச்சேரி, ஜன. 16

இடம் பெயர்ந்த மக்களுக்கு வீடு வழங்கும் நிகழ்வுகள் கிளிநொச்சி மாவட்டத்தில் கோணாவில் பகுதியிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பேராவில் பகுதியிலும் நேற்று இடம் பெற்றன.

கோணாவில் பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

கோணாவில் பிரதேச செயலகமும், கிளிநொச்சி பொருளாதார வளர்ச்சி நிறுவனமும் இந்த வீடுகளை அமைத்திருந்தன.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி அரச அதிபர் திரு. எஸ். தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தேவை

குரக்கன் தேவை. இருப்பவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும். அண்ணா கோப்பி, ஐயா கடை, மீசாலை. (சி-3050)

ஆடைகள் வெட்டித் தைக்கக்கூடிய பெண் ரெயிலர்கள் தேவை. தொடர்புகொள்ளவும்: கண்டி வீதி, (சோழன் அரைக்கும் ஆலை முன்பாக), சங்கத்தானை, சாவகச்சேரி. (40181)

### சோலார் தேவை

நல்ல நிலையிலுள்ள சோலார் (Solar) தேவை. தொடர்பு: ச. சுப்பிரமணியம், (இளைப்பாறிய ஆசிரியர்), அறிவொளி சனசமூக நிலைய வீதி, மீசாலை வடக்கு, கொடிகாமம். (40183)

### விற்பனைக்கு

Lumala, Hero பெண்கள் சைக்கிள்களும் Hero சிறிய சைக்கிளும் விற்பனைக்குண்டு. கே.எஸ்.வை. மோட்டோர்ஸ், கண்டி வீதி, (AGA Office எதிரில்) சாவகச்சேரி. (39978)

### அடையாள அட்டை

அடையாள அட்டைகளை கவரிட்டு கொள்வதற்கும், தெளிவான போட்டோப் பிரதிகளை உடனடியாகப் பெற்றுக்கொள்ளவும் நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம் கிளீன்கட், சாவகச்சேரி நீதி மன்றம் அருகில். (39936)

## கிளிநொச்சியில் கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜன. 16

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் இயங்க ஆரம்பித்துள்ள 7 ப. நோ. கூ. சங்கங்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று கிளிநொச்சி செயலகத்தில் நடைபெறவிருக்கிறது.

சங்கங்களின் கிளைகள் அமைய வேண்டிய இடங்கள், சங்கங்களின் செயற்பாடுகள் பற்றி இக்கலந்துரையாடலில் ஆராயப்படும். (இ-3-ரி)

## மாடு கட்ட போன பூசகரின் சைக்கிள் திருட்டு

மந்திகை, ஜன. 16

வயலில் மாட்டைக் கட்டிவிட்டு வீதிக்கு வந்து பார்த்தபோது வீதியில் விட்டுச்சென்ற சைக்கிள் திருடப்பட்டிருந்தது.

சாவகச்சேரி கிராம்புவில் என்ற இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

அவ்விடத்தைச் சேர்ந்த பூசகர் ஒருவரின் சைக்கிளே இனந்தெரியாத நபர்களால் திருடிச் செல்லப்பட்டது.

சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த அவரது ஆலயத் திறப்பும் சைக்கிளுடன் திருட்டுப் போயுள்ளது. (இ-15)

## சம்பள முற்பணம்

சாவகச்சேரி, ஜன. 16

யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரிந்து தற்போது சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை உட்பட ஏனைய வைத்தியசாலைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு 3 மாத சம்பள முற்பணம் வழங்கப்படுகிறது. (இ-31)

# திரவப் பணம் எடுத்துவருவதற்கான வங்கித் தலைவர் முயற்சியும் தோல்வி

சாவகச்சேரி, ஜன. 16

வடக்கே வங்கிகளுக்கு திரவப்பணம் எடுத்து வருவது தொடர்பாக இலங்கை வங்கித் தலைவர் மேற்கொண்ட முயற்சியும் பயனளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கில் உள்ள வங்கிகளுக்கு திரவப்பணம் அனுப்ப வேண்டியதன் அவசியம் குறித்து இலங்கை வங்கித் தலைவர் திரு. ராஜன் ஆசீர்வாதம் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி இருந்தார்.

திரவப்பணம் எடுத்துச் செல்வது தற்போதைய நிலையில் ஆபத்து என பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்து திரவப்பணம் எடுத்து வருவதற்கு அனுமதி மறுத்துவிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச அவர் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களில் ராஜன் ஆசீர்வாதம் அரச பிரதிநிதியாக பங்குபற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## பெற்றோல் குண்டு வீச்சு!

காத்தான்குடியில் முஸ்லிம் வர்த்தகர் ஒருவரின் வீடு பெற்றோல் குண்டு வீச்சுக்கு இலக்கானது

கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு 2-30 மணியளவில் அந்த வர்த்தகரின் வீட்டுக்குள் நுழைந்த ஒருகோஷ்டி பெற்றோல் குண்டுகளை வீசியதுடன் அங்கு நின்ற மோட்டார் சைக்கிள் ஒன்றையும், துவிச்சக்கரவண்டி ஒன்றையும் தீயிட்டுக் கொழுத்தியது என்று தெரிவிக்கப் பட்டது.

அங்கு கண்டபடி துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

## வெடி விளையாட்டால் வால்வ் கட்டை திருட்டு

கைதடி, ஜன. 16

சிறுவர்கள் மத்தியில் தற்போது ''வால்வ்'' கட்டை விளையாட்டு பரவிவருகிறது இதன் காரணமாக சைக்கிள்களில் ''வால்வ்'' கட்டை திருடப்படுவதாசத் தெரிவிக்கப் படுகிறது.

''வால்வ்'' கட்டைக்குள் தீக்குச்சி மருந்தைச் செலுத்தி பெரிய சத்தத்துடன் வெடிக்க வைக்கும் விளையாட்டு கைதடிப் பகுதியில் தற்போது காணப்படுகிறது. வீதிகளில் விடும் சைக்கிள்களில் வால்வ்கட்டைகள் திருடப்படுவதற்கு இந்த விளையாட்டுத்தான் காரணம் என்று கூறப்படுகிறது.

தற்போது சைக்கிள் உதிரிப் பாகங்கள் உச்ச விலையில் விற்கப்படுவதாலும் —

உதிரிப்பாகங்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாலும் — ''வால்வ்'' கட்டை வாங்குவதற்கு பல கடைகள் ஏறி இறங்க வேண்டி உள்ளதாம் (இ-154)

## பொங்கல் இம்முறை சோபிக்கவில்லை

### அமைதியாகக் கழிந்தது

பொங்கல் பண்டிகை இம்முறை சோபிக்கவில்லை.

வழமையான நாள் போலவே நேற்றைய பொங்கல் நாளும் அமைதியாக கழிந்தது.

பொங்கலை முன்னிட்டு சனி, ஞாயிறு தினங்களில் கடைகள் திறந்திருந்தன— எனினும் குறிப்பிடத்தக்க அளவுக்கு வியாபாரம் நடைபெறவில்லை.

வடமராட்சிப் பகுதியில் பொங்கல் பொருள்களுக்குக் கூட தட்டுப்பாடு நிலவியது.

பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்பட்ட சர்க்கரையையும் பலர் பெற முடியவில்லை. சர்க்கரை முடிந்து விட்டது. என்ற பதிலே சங்கக்கடைகளில் தெரிவிக்கப்பட்டது.

மொத்தத்தில் அமைதியாகவும், எழுச்சியற்ற நிலையிலும் பொங்கல் தினம் இடம் பெற்றது. (இ-31-15)


இல்லத்தரசிகளின் பாராட்டை பெற்ற
அண்ணா தயாரிப்புக்களான

★ கோப்பி
★ தோசை மா
★ உழுந்து மா
★ ஒடியல் மா
★ மற்றும் இனிப்பு ரொபி வகைகள்.
★ ஜீவாகாரம்
★ அப்பம் மா
★ அரிசி மா
★ புழுக்கொடியல் மா

எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் தேவைக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்.

**அண்ணா கோப்பிக் கடை**

கந்தசாமி கோவில் அருகாமை,
யாழ். வீதி,
கிளிநொச்சி,

ஐயா கடை,
மீசாலை.

(சி-3152)


## யாழ். மத்திய கல்லூரி

### பழைய மாணவர் சங்கம்

### செயற்குழுக் கூட்டம்

**21-01-1996** ஞாயிற்றுக்கிழமை மு. ப. 11.30 மணி
மதியபோசனம் பி. ப. 1. 00 மணி
இடம்:: டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி

★ செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது, சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

★ அத்துடன், பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தயவு செய்து தங்கள் தற்போதைய முகவரிகளை சங்கத் தலைவரின் முகவரிக்கு அறிவிக்கும் படியும் கேட்டுக்கொள்கிறேன்.

இ. ராஜாராம்
தலைவர்

கா. மாணிக்கவாசகர்
செயலாளர்

இல 6, கற்குழி, 1ஆம் ஒழுங்கை. தபால வீதி ஊடாக,
சாவகச்சேரி.

(39966)

## காணவில்லை

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும்,
கரம்பனை வசிப்பிடமாகக் கொண்டவரும்,
தற்பொழுது கொக்குவில் மேற்கில் வசித்தவரான
துரையப்பா அரசரத்தினமும் (தம்பிராசா)
அவரது மகன் சசிதரன் (சசி)

ஆகிய இருவரையும் 09-11-95 இன் பின் காணவில்லை. இவர்கள் எங்கிருந்தாலும் கீழ் குறிப்பிட்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். இவர்கலள யாராவது கண்டிருந்தாலும் உடன் அறிவிக்கவும்.

தகவல்: றஞ்சிதமலர் சோதிநாதன் (சகோதரி)

தொடர்பு கொள்ள வேண்டியது:
சிவநீதி களஞ்சியம்,
கந்தசாமி கோவிலடி,
யாழ். வீதி, கிளிநொச்சி. (சி-3156)

## 60 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்



தோற்றம்: 30 — 08 — 1950

மறைவு: 20 — 11 — 1995

அமரர்

**நாகலிங்கம் செல்வமாணிக்கம்**

(பிரபல வர்த்தகர், சிவராஜ் றேடிங் கோ, பருத்தித்துறை)

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும், உங்கள் நினைவும், பாசமும் என்றும் எங்களை விட்டு அகலாது.

நாளை (17-01-1996) புதன்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

குடும்பத்தினர்

மணல் ஒழுங்கை,
தும்பளை,
பருத்தித்துறை.

(40078)

## நன்றி நவிலல்

**A. R. ராஜு**

(ஓய்வுபெற்ற உதவி மதுவரிஆணையாளர், வட மாகாணம்)

அன்னாரின் இறுதி ஆராதனையில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தி தமது அனுதாபத்தை தெரிவித்தும் பல்வேறு வகையிலும் உதவி புரிந்த மதகுருமார், நிர்வாக உறுப்பினர் (தென் இந்திய திருச்சபை), மதுவரித்திணைக்கள உத்தியோகத்தர் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

றோகான் ராஜு
(மகன்)

41, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(39965)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சந்திரிகாவின் தெரிவு!

ஜனாதிபதி சந்திரிகாவின் பொங்கல் செய்தி அவர் எங்கே நிற்கிறார்; அவரது உண்மையான நோக்கம் — எண்ணம் — என்ன என்பதனை வெகு தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

நாட்டின் பெரும்பாலான மக்கள் எதிர்பார்க்கும் விமோசனத்தை சுதந்திரத்தை சமாதான வழியினாலேனும், போரின் வாயிலாகவேனும் சரி அடைந்தே தீருவது என்று அரசாங்கம் தற்போது உறுதி பூண்டுள்ளது — என்று சந்திரிகா தமது பொங்கல் செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

போரின் ஊடாகச் சமாதானத்தைக் காணப் போவதாக வாய்ப்பந்தல் போட்டு வந்தவர் சந்திரிகா. கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி அரசாங்கத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிந்ததிலிருந்து அவர் இந்த நிலைப்பாட்டையே கைக்கொண்டார்.

ஆனால் பொங்கலோடு சமாதான வழி இல்லையேல் போர் என்ற நிலைப்பாட்டுக்கு வந்திருக்கிறார்!

அரசியல்வாதிகள் தமது நிலைப்பாடுகளையும், கோட்பாடுகளையும் அடிக்கடி, நிமிடத்துக்கு நிமிடம் மாற்றிக் கொள்வதில் வல்லவர்கள். அவர்களுக்கு எப்போதும் இரட்டை நாக்கு இருப்பதுண்டு.

சமாதான வழி இல்லையேல் போரின் வழி என்று ஜனாதிபதி பேச்சுக்குச் சொன்னாலும், போர் வழியை நாடுவதே அவரின் முழு நோக்கமும் ஆகும்.

கொழும்பிலிருந்து நாளாந்தம் வரும் செய்திகளையும், தகவல்களையும் நோக்கின் அரசு போர் வழிக்கே செல்கிறது என்பது எவருக்கும் வெகு இலகுவில் புரியும்.

நவீன விமானங்கள், கப்பல்கள் வந்துள்ளன; மேலும் பலவற்றைக் கொள்வனவு செய்ய ஏற்பாடுகள் நடக்கின்றன; கிழக்கில் அரச படைகள் பெருந்தாக்குதல்களை நடத்தப் போகின்றன; வடக்கில் அடுத்த வாரம் தாக்குதலை ஆரம்பிக்கத் திட்டம்— என்று எல்லாமே போர் பற்றியதாகவே உள்ளன.

விடுதலைப் புலிகளை முழுமையாக ஒழித்ததன் பின்பே அரசியல் தீர்வு கொண்டுவரப்படும் என்றெல்லாம் அரச தரப்பில் கூறப்படுகிறது.

இவை எல்லாம் ஒட்டுமொத்தமாக எதனைக் காட்டுகின்றன?

அரசு - சந்திரிகா — போர் வழிக்கே முதன்மை கொடுத்து அதனையே நாடியுள்ளது என்பது மிக வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது.

சமாதானமும் போரும் பெரு இடைவெளிகொண்ட இரு துருவங்கள். போர்வழி செல்லச் சித்தமான அரசு, சமாதானத்தை உள்ளார்ந்தமாக விரும்பவில்லை என்பதே அர்த்தம்.

பொங்கலோடு புதிய யுகத்துக்கான அரசியல் அடித்தளத்தை அமைக்கப்போவதாக சந்திரிகா கூறியது—

தமிழர்களை அழித்தொழிப்பதற்காக, முற்றுமுழுதாக போர் வழியையே தெரிவு செய்யப்போவதனைத் தான் என்று சந்தேகத்துக்கு இடமின்றிக்கொள்ளலாம்.

# இடப்பெயர்ந்த மக்களுக்கு உதவ கிளிநொச்சியில் செயலணிக்குழு

கிளிநொச்சி, ஜன. 16

வலிகாமத்தில் இருந்து கிளிநொச்சிக்கு வந்துள்ள மக்களுக்கான பணிகளை இலகுவாக்கும் நோக்குடன் விசேட செயலணிக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஆறு துறைகளாக செயற்பாடுகளை பிரித்து, அத்துறைகளுக்கு பொறுப்பாக உயர் அரச அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்தவர்களுக்கு இலகுவாக சேவைகள் கிடைக்க வசதியாக அமைக்கப்பட்டுள்ள இந்த செயலணியில் இடம்பெறுவோர் வருமாறு:-

★ உணவும், உணவுப் பாதுகாப்பு — மேலதிக அரச அதிபரும், திட்டப் பணிப்பாளருமான திரு. தி. இராசநாயகம்.

★ குடிசை அமைத்தல், உணவு அல்லாத பொருள்கள் விநியோகம் — யாழ். திட்டமிடல் பணிப்பாளர் திரு. வி. எஸ். சுவாமிநாதன்.

★ சுகாதாரம், குழந்தை நலம், சமூக உளத்தேவைகள், போசாக்கு—பிரதி சுகாதார சேவைப்பணிப்பாளர் — டாக்டர் சிவகுரு.

★ கல்வித்துறை—திரு. தடுரைசிங்கம்.

★ உட்கட்டுமானத் துறை — திரு. எஸ். செல்வரத்தினம். (இ-3)

## விசேட பொலீஸ்கோஷ்டி உடப்பு பகுதிக்கு விரைவு

அதி சக்தி வாய்ந்த குண்டுகள் தயாரிக்கப் பயன்படும் வெடி மருந்துகள் உடப்பு கடற்கரைப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டமை தொடர்பாக விசாரணை நடத்த விசேட பொலீஸ் கோஷ்டி ஒன்று அங்கு சென்றுள்ளது.

இந்த வெடி மருந்து முல்லைத்தீவில் இருந்து வள்ளங்கள் மூலம் உடப்புக்கு கொண்டு வரப்பட்டதாகவும் —

இவ்வாறான வெடிமருந்துகள் ஏற்கனவே மீன் லொறிகள் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் — இதுவரை நடந்த விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த வெடி மருந்துகளை கொண்டு வர சூத்திரதாரிகளாக செயற்பட்டதாகக் கூறப்படும் இரண்டு பேர் தலைமறைவாகியிருக்கின்றனர்.

இவர்களைத் தேடி சிலாபம், உடப்பு பகுதிகளில் பொலீஸார் தீவிர சோதனைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

## வன்னிப் பகுதி ஆசிரியருக்கு இ. த. ஆ. சங்கம் நன்றி

சாவகச்சேரி, ஜன. 16

யாழ் மாவட்ட மக்கள் தமது உடமைகள் அனைத்தையும் இழந்து வன்னிப் பெரு நிலப்பரப்புக்கு அகதிகளாக இடம் பெயர்ந்த போது அவர்களை வரவேற்று பாடசாலைகளிலும், கோயில்களிலும், தனியார் வீடுகளிலும் தங்கவைத்து பராமரிப்பதில் புனர்வாழ்வுக் கழகத்துடன் பக்க பலமாக நின்று தோளோடு தோள் கொடுத்து உதவிய வன்னிப் பெரு நிலப்பரப்பு ஆசிரியர்கள் அனைவருக்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் விடுத்த அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும் எண்ணிக்கையான மக்கள் வன்னிக்கு இடம் பெயர்ந்த நாள்களில் ஆசிரியர்கள் இரவு, பகலாக முகாம்களில் தங்கியிருந்து முகாம்களைப் பராமரிக்கும் பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆசிரியர்களின் இப் பணி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, சமூகத்தால் பாராட்டப்படுகின்ற ஒரு பணியாக அமைந்திருக்கிறது.

அகதி முகாம்களைப் பராமரித்து பணியாற்றும் போது சில சமயங்களில் சிலரின் போக்குகள் சில அதிபர்களின் ஆசிரியர்களின் கௌரவத்தை பாதிக்கக் கூடியதாகவும் —

மனதைப் புண்படுத்தக்கூடியதாகவும்— இருந்த போதும் அவற்றைச் சகித்துக்கொண்டு பொதுப்பணி, சமூகப்பணி என்ற நினைவோடு தமது பணியைத் தொடர்ந்தமையை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் பாராட்டுகிறது.

இப்படி மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

16 — 01 — 1996

இரவு

★ 8-02 — தளபதி கேணல் கிட்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி
★ 8. 30 — செய்திகள்.
★ 8. 40 — அறிவிப்புகள் தொடர்ந்து 9. 00 மணி வரை தாயகப்பாடல்கள்

17 — 01 — 1996

காலை

★ 7. 02 — மாவீரவணக்கம்
★ 7-10 — களத்தில் மலர்ந்தவை
★ 7. 30 — செய்திகள்
★ 7. 35 பத்திரிகைச் செய்திகள் தொடர்ந்து 8. 00 மணி வரை களத்தில் மலர்ந்தவை.

## சமைத்த உணவா? உலர் உணவா? விருப்பப்படி பெறுவதற்கு வசதி

### கிளிநொச்சி அரச அதிபர் தகவல்

கிளிநொச்சி, ஜன. 16

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் தங்கியுள்ளவர்களுக்கு விருப்பப்படி சமைத்த உணவோ, அல்லது உலர் உணவோ வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி அரச அதிபர் எஸ். தில்லை நடராசா தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து வந்து முகாம்களில் தங்கியுள்ளவர்கள் தாமே சமைத்து உண்ண விரும்பினால் அவர்களுக்கு உலர் உணவு வழங்கப்படும் என்றும்—

சமையல் பாத்திரங்கள் மற்றும் வசதிகள் இல்லாத நிலையில் சமைக்க முடியாது என்று தெரிவிப்பவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்படும் என்றும் — அவர் தெரிவித்தார்.

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மீனவ குடும்பங்களுக்கு சமைத்த உணவுக்கும் பதிலாக உலர் உணவு வழங்கப்படுகிறது என்றும் அவர் கூறினார். (இ-3-ரி)

## புத்தளத்தின் பாதுகாப்பு ஐ.தே. கட்சி எம்.பி. கவலை

40 ஆயிரம் துருப்புக்கள் வடக்கே அனுப்பப்பட்டதால் கிழக்கு புத்தளம் பகுதியின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

குருநாகல் மாவட்ட ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவசரகால சட்ட நீடிப்பு விவாதத்தில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் இன்று மக்கள் இல்லை.

யாழ்ப்பாணம் செல்வதற்கு எவருக்கும் — பத்திரிகையாளர் உட்பட — அனுமதி வழங்கப்படவில்லை.

தமிழ் எம். பிக்களும் அங்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை. இது ஏன்? —

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார். [இ-3)

## பருத்தித்துறை மாணவர் மண் மீட்புபோரில் இணைவு

மந்திகை, ஜன. 16

வடமராட்சிப் பகுதியில் பருத்தித்துறை வட்டத்தில் கடந்த ஓரிரு தினங்களில் 10 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் போராளிகளாக இணைந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் மாணவர்கள்.

சிங்கள அரசின் இன ஒடுக்கல், ஆக்கிரமிப்பு நடவடிக்கையினால் நாம் எமது சொந்த மண்ணை இழந்து ஒதுங்கிக் கொண்டிருக்கின்றோம். நாம் மாணவர்களாக இருந்தும் எமது கல்வியைத் தொடர முடியாது ஆண்டுக் கணக்காக கல்வியிலிருந்து பின் தள்ளப்பட்டுள்ளோம்.

நீண்ட நாள்களாக எமது பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் உள்ளன.

கல்வியை ஒழுங்காகத் தொடர முடியாத இந் நிலையில் எமது இளஞ் சிறார்களாவது தமது கல்வியைத் தொடர வழி செய்ய வேண்டிய [illegible] டத்தில் இணைகின்றோம்.

இப்படி அவர்களால் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## சரித்திரமானவன் கிட்டு

ஆதிக்க வெறிபிடித் தலைவின்ற அந்நியன்
அடக்குதல் கண்டெ ழுந்தே
வீதிக்கு வந்துநல் விதியொன்று படைத்திட
விரைந்தது வேங்கை யின்று
ஏதுக்கும் வழியிலா அடிமையாய் எம்மினம்
இருப்பது மடமை என்று
சாதித்துச் சுதந்திரத் தமிழனைக் காணவே
சரித்திர மானவன் கிட்டு

கிட்டிடும் சுதந்திரம்; கிட்டிடும் போதிலே
கிட்டிடும் மரண முத்தம்
கொட்டிட ஆயிரம் கொண்டெழும் வேளையில்
கண்டிடான் அச்சம் ஏதும்
பட்டிடும் துன்பமோ பல்கோடி ஆயினும்
புறங்கொடா மரபினன் அன்று
கட்டிய கொள்கையால் கலத்திலே தீயெனக்
கடலிலே கலந்தவன் கிட்டு

அஞ்சிரும் மண்ணிலே கெஞ்சியே ஓடிய
நஞ்செனும் இந்தி வல்லூறு
வஞ்சனை யானதோர் வன்முறை யோடெதிர்
கொண்டதே வேங்கை தன்னை
அஞ்சிடா நெஞ்சொடு ஆழ்கடல் மீதிலோர்
அழிந்திடாக் காவியம் பாடத்
துஞ்சிடாச் சோதரர் கூடவே தீதனை
நெஞ்சிலே வைத்தவன் கிட்டு

ஆண்டிடும் தமிழினம் அரசது படைத்திட
அர்ச்சனை யானதே புலிகள்
ஈண்டிலா அவர்புகழ் எத்தனை எத்தனை
எழுதிடல் மட்டுமா உரிமை
வேண்டிடும் சுதந்திரம் விரைந்தெதிர் எழுந்திட
வெந்தநம் சோதரர் ஆணை
பூண்டதோர் ஆயுதம் போர்முனை போதலே
புனிதமாம் இந்தநாள் சபதம்

— சேரன் சிவராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டம் மிருசுவிலில் நேற்று அங்குரார்ப்பணம்

சாவகச்சேரி, ஜன 16

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் முகாம்களில் தங்கியுள்ளவர்களை மீளக் குடியேற்ற வசதியாக மிருசுவில் கரம்பகம் பகுதியில் அமைக்கப்படவிருக்கும் ஆயிரம் வீடுகள் திட்டத்தின் வேலைகள் நேற்று நண்பகல் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டன.

யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் தலைமையில் நடந்த இந்த வைபவத்தில் முதலாவது வீட்டுக்கான அத்திவாரம் நேற்று இடப்பட்டது.

இந்த வைபவத்தில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு, அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், ஐக்கிய இராஜ்ஜிய சிறுவர் பாதுகாப்பு நிதியம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அகியவற்றின் பிரதிநிதிகளும், செயலக அதிகாரிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

ஒரு மாதகாலத்தில் வீடுகள் அமைத்துக் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-3)

## வல்லை வைத்தியசாலை

# வெளிநோயாளர் பிரிவு முழுமையாக இயங்கும்

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவு இன்று செவ்வாய்க்கிழமை முதல் முழுமையாக இயங்கவுள்ளது.

வடமராட்சி வடக்கு கரையோரப் பகுதிகள் கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியாக ஷெல் வீச்சுக்களுக்கு இலக்கானதைத் தொடர்ந்து இவ் வைத்திய சாலையின் வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவு முற்பகலில் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட சேவையாக நடைபெற்று வந்தது.

இன்று முதல் வழமைபோல காலை 8.30 மணி முதல் 11.30 மணி வரையும் பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரையும் வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவு இயங்கும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(இ-173)

# சிறைச்சாலைகளை புலிகள் தாக்கலாம்

கொழும்பு, ஜன 16

வெலிக்கடை, கொழும்பு மகஷின் மற்றும் களுத்துறைச் சிறைச்சாலைகள் விடுதலைப் புலிகளின் முக்கிய தாக்குதல் இலக்குகளாக அமைந்துள்ளதால் அவற்றிற்கு போதிய பாதுகாப்பை வழங்குமாறு அரசு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்துள்ளது என ''லங்காதீப'' பத்திரிகை தெரிவிக்கிறது

இந்தச் சிறைச்சாலைகளில் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த பல சந்தேக நபர்கள் வைக்கப்பட்டுள்ளதால் அவர்களைச் சிறையிலிருந்து மீட்க புலிகள் திட்டந் தீட்டியுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளனவாம்.

கடந்த வருடம் பலாலி இராணுவ முகாமுக்குள் ஊடுருவி ஹெலி மீது தாக்குதலை மேற்கொண்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்ட மேஜர் நிக்சன் என்பவரும் சிறை வைக்கப்பட்டவர்களுள் ஒருவர் என்றும் —

விடுதலைப் புலிகளால் கொழும்பில் தாக்குதல் மேற்கொள்ளப்படுமாயின், சிறைச்சாலைகள் மீது கட்டாயமாகத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம் என்பதால், 24 மணி நேரமும் பலத்த பாதுகாப்பு வழங்கப்படுகின்றது என்றும்— அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ.10)

## புத்தூர் சென்றவர்களில்

# மேலும் மூவர் பற்றி எதுவும் தெரியாது உறவினர் அவலம்

இம்மாதம் 7 ஆம் திகதி புத்தூர் கிழக்குப் பகுதிக்கு வீடு பார்க்கச் சென்றவர்களில் மேலும் மூவர் பற்றிய விவரங்கள் கிடைக்காததால் உறவினர்கள் துயரத்துடன் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாணிக்கம் தெய்வானை (வயது 52), இவரின் சகோதரி சோமு செல்லம்மா(வயது 50), சபாபதி நடராசா(வயது 23) ஆகியோரே இம் மூவரும் ஆவர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொண்டு இதுவரை பிரயோசனம் ஒன்றும் இல்லை என்றும் —

இவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிய முடியாது இருப்பதாகவும் —

இவர்கள் உயிருடன் இருக்கிறார்களா? அல்லது இறந்து விட்டார்களா? காயமடைந்துள்ள நிலையில் இராணுவத்தினரிடம் அகப்பட்டு பலாலியில் சிகிச்சை பெற்று வருகிறார்களா? என அறிய முடியாதுள்ளது என்றும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

(இ-13)

# உங்கள் சைக்கிளின் பாதுகாப்பை நீங்களே உறுதிசெய்துகொள்ளுங்கள்

## நடேசன் கோரிக்கை

'சைக்கிள் களவுகள் அதிகரித்துள்ளதால் பொது மக்கள் தமது சைக்கிள்களின் பாதுகாப்பை தாமே உறுதி செய்ய வேண்டும்'

இப்படி தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் கேட்டுள்ளார்.

பொது இடங்களிலும், சந்தைகளிலும், கடைகளுக்கு முன்னாலும் விட்டுச் செல்லும் ஏராளமான சைக்கிள்கள் களவு போகும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்றும் —

இந்தக் களவை தடுக்கும் வகையில் பொதுமக்கள் தமது சைக்கிள்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் — அவர் தெரிவித்துள்ளார்.

அதே போன்று கால் நடைகளின் களவும் அதிகரித்துள்ளது என்றும் —

பொதுமக்கள் தமது கால் நடைகளை கட்டி வளர்ப்பதன் மூலம் களவைத் தடுக்கலாம் என்றும் — அவர் கூறினார்.

(இ-3)

## சான்றிதழ்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை நடத்திய மருந்தாளர் பயிற்சி நெறியில் சித்தி அடைந்தோருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க மீசாலைக் காரியாலயத்தில் இடம் பெறும்.

## தீர்ப்பு இன்று

கொழும்பு, ஜன. 16

ஜனாதிபதியின் சிபார்சின் கீழ் கலைக்கப்பட்ட வடமத்திய சப்பிரகமுக மாகாண சபைகள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான தீர்ப்பு இன்று வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.


## கிளிநொச்சியில்

# ஜெயா அழகு மாடம்

(நீதிமன்றம் முன்பாக)

யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த ஜெயா அழகு மாடம் தற்பொழுது கிளிநொச்சியில் இயங்குகிறது என்பதை அன்பர்கள் ஆதரவாளர்கள், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

இமிரேஷன் கோல்ட் கவறிங் நகைகள், அழகு சாதனப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள், பிளாஸ்டிக் வகைகள், லேஸ், நூல் வகைகள், சிறுவர்களின் பாவனைப் பொருள்கள், விளையாட்டுப் பொருள்கள், சில்வர் பாத்திரங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

ஜெயா அழகு மாடம்

177 எ 187, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-3153)


## நாடாளுமன்ற...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களும் நாடாளுமன்றத்துக்குள் இருந்தனர்.

இது விடயம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற செயலாளரின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

உயர் பாதுகாப்பு இருந்த வேளை இந்த விமானம் பறந்தமை அரச வட்டாரத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதே வேளை பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு நாடாளுமன்றத்தையும் தியவன ஓயாவையும் சூழவுள்ள நிலப்பரப்பு உயர்மட்ட பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தை நோக்கிச் செல்லும் வழிகள் யாவும் கூட்டத்தொடர் நடக்கும் நாள்களில் மூடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பைக் கருதி பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த ஹெலி ஊடாக வேறு மார்க்கத்தாலேயே நாடாளுமன்றத்துக்கு செல்வது வழக்கம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## இந்தியாவின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றி பெறமுடியாது. இது ஒரு யதார்த்த நிலையாகும் என்றும் அவர் கூறினார்.

இலங்கையில் இந்திய அமைதிப்படை நிலை கொண்டிருந்த போது அதன் நடவடிக்கைக்கு பொறுப்பாக இவர் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-3)

# கிளாலியில் பிடிபட்டோர் அனுராதபுரத்தில்

## உறவினர் சென்று பார்த்தனர்

சாவகச்சேரி, ஜன. 16

கடந்த நவம்பர் மாதம் 29 ஆம் திகதி கிளாலி கடலேரியை கடக்க முற்பட்ட வேளை படையினரால் கைது செய்யப்பட்ட 12 பேரும் அனுராதபுரம் சிறையில் தற்போது வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

இவர்கள் வவுனியாஜேசேப் முகாமில் வைக்கப்பட்டுள்ளதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் அவர்களின் உறவினர்களுக்கு தெரிவித்ததாகவும் —

அதன்படி அவர்களின் உறவினர்கள் வவுனியா சென்றதாகவும் —

ஆனால் வவுனியாவில் அவர்கள் இல்லை என்றும் —

அனுராதபுரத்தில் அவர்கள் உள்ளதாக அங்குள்ள படையினர் தெரிவித்தனர் எனவும் — தெரிவிக்கப்பட்டது.

பின்னர் அனுராதபுரம் சென்ற உறவினர்கள் அனுராதபுரத்தில் உள்ள சிறையில் அவர்களைப் பார்வையிட்டனர்.

உணவு, உடை தவிர்ந்த எந்தப் பொருள்களையும் சிறைக்குள் எடுத்துச் செல்ல அவர்கள் அனுமதிக்கப் படவில்லை.

கடும் சோதனையின் பின்பே சிறைக்குள் செல்ல அவர்கள் அனுமதிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப் பட்டது? (இ-3)

## இடம் பெயர்ந்தோர்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி )

லைநடராசா, திட்டப்பணிப்பாளர் திரு எஸ். இராசநாயகம், ஆகியோரும் —

அகதிகளுக்கான ஐ. நா, தூதரகம், உள்ளூர், சர்வதேச தொண்டர் அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

பேராவில் பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட வீடுகள் மக்களிடம் கையளிக்கப்பட்டன.

(இ-3)

## மற்றொரு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி அவர் கூறினார்.

இதற்கிடையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மற்றும் ஒரு பாரிய தாக்குதல் நடவடிக்கைக்கு முன்னோடியாக விமானங்கள், கப்பல்கள், கனரக ஆயுதங்கள், டாங்கிகள் ஆகியன நாளாந்தம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த வண்ணம் இருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

(இ-3-6)

# வெள்ளி தோறும் திருவாசக முற்றோதல்

சாவகச்சேரி, ஜன. 16

தமிழ் மக்களின் இன்னல்கள் நீங்கப் பிரார்த்தித்து தென்மராட்சியில் உள்ள ஆலயங்கள் தோறும் திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது.

பிரதி வெள்ளிக்கிழமை தோறும் பி. ப. 2 மணியிலிருந்து 4 மணி வரை தென்மராட்சிப் பகுதியில் உள்ள குறிப்பிட்ட ஓர் ஆலயத்தில் திருவாசக முற்றோதலை செய்வதென —

அண்மையில் பெரியமாவடி வித்தகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது.

இந்த வகையில் முதல் நிகழ்ச்சி தை மாத முதல் வெள்ளிக்கிழமையான எதிர் வரும் பத்தொன்பதாம் திகதி வித்தக விநாயகர் ஆலயத்தில் நடைபெறும்.

(அ)

# மரண அறிவித்தல்

## சீனியர் முத்துவேலு

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சீனியர் முத்துவேலு (இளைப்பாறிய புகையிரத நிலைய ஆணைச்சீட்டுப் பரிசோதகர்) 13 - 01 - 96 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சீனியர் — குஞ்சரப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், நாகம்மாவின் அன்புக் கணவரும், லோகேஸ்வரன், யோகேஸ்வரன், லோகமாலினி, யோகமாலினி, கோணேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகுணாதேவி, றமணி, குலசிங்கம், இரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களாகிய சுப்பிரமணியம், சின்னத்தம்பி, சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 14 - 01 - 96 இல் கைதடி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குழந்தைவடிவேல்
(சகலன்)

மடத்தடி,
மந்திகை.

(40184)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 16-01-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org